# COMBINED TECHNICAL SERVICES EXAMINATION (ITI LEVEL) - II

## COMPUTER BASED TEST

## DATE OF EXAM: 16.11.2025 FN

## PAPER – I - TAMIL ELIGIBILITY TEST & GENERAL STUDIES (CODE: 501)

# பகுதி-அ (தமிழ் தகுதி தேர்வு)

## Part-A (Tamil Eligibility Test)

**வினாக்கள் : 1–100** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 1–100** **Total Marks : 150**

1. இரு வினைகளின் வேறுபாடு அறிக.

பூவின் இதழ்கள் ————————. மயில் தோகையை ————————.

(A) மலர்ந்த, மலர்த்த

(B) விரிந்தது, விரித்தது

(C) வளர்ந்த, வளர்த்து

(D) மலர்ந்த, வளர்ந்த

(E) விடை தெரியவில்லை

2. கீழ்க்காணும் தொடரில் உள்ள ஒற்றுப்பிழைகளைத் திருத்துக.

சான்றாக கல் என்பது விற்பனைப் பொருளன்று.

(A) சான்றாகக் கல் என்பது விற்பனை பொருளன்று

(B) சான்றாக கல் என்பது விற்பனைப் பொருளன்று

(C) சான்றாக கல் என்பது விற்பனை பொருளன்று

(D) சான்றாகக் கல் என்பது விற்பனைப் பொருளன்று

(E) விடை தெரியவில்லை

3. பிழையற்ற வாக்கியத்தினைக் கண்டறிக.

(A) பிறர் பொருளை விரும்பாமை ஒரு அறம்

(B) பிறர் பொருலை விரும்பாமை ஓர் அரம்

(C) பிறர் பொருளை விரும்பாமை ஓர் அறம்

(D) பிறர் பொருளை விறும்பாமை ஓர் அறம்

(E) விடை தெரியவில்லை

4. 'காட்சி – வெற்றி' இவற்றுள் இடம் பெறும் சரியான வினைச் சொற்களைத் தேர்ந்தெடுக்க.

(A) காட்சி – வென்ற

(B) கண் – வென்று

(C) வென்ற – கண்

(D) காண் – வெல்

(E) விடை தெரியவில்லை

5. எதிர்ச்சொல் அறிக.

குளுமை

(A) செம்மை

(B) பசுமை

(C) வெம்மை

(D) மேன்மை

(E) விடை தெரியவில்லை

6. பிறமொழி சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல் கண்டறிதல்.

"போட்டோ காப்பியர்" Photo Copier–என்ற சொல்லின் இணையான தமிழ்ச்சொல்

(A) ஒளிப்படி பெட்டி

(B) ஒளிப்படி மெஷின்

(C) ஒளிப்படி இயந்திரம்

(D) ஒளிப்படி நகல்

(E) விடை தெரியவில்லை

7. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல் கண்டறிதல்

ஸ்மார்ட்கார்டு — (Smart Cards) என்ற சொல்லின் இணையான தமிழ்ச் சொல்

(A) பெயர் அட்டை
(B) ரேசன் அட்டை
(C) ரேசன் கார்டு
(D) திறன் அட்டை
(E) விடை தெரியவில்லை

8. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொல் கண்டறிதல்

டிமாண்ட் டிராப்ட்

(A) வங்கி
(B) கடன் அட்டை
(C) வரைவோலை
(D) காசோலை
(E) விடை தெரியவில்லை

9. பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லைக் கண்டறிக.

விஸ்தாரம்

(A) பெரும் பரப்பு
(B) அழகு
(C) செல்வம்
(D) மிகுதி
(E) விடை தெரியவில்லை

10. எதிர்காலப் பெயரெச்சத்தைக் கண்டறிக.

(A) பாடுகின்ற பாடல்
(B) பாடிய பாடல்
(C) பாடும் பாடல்
(D) பாடல் பாடிய
(E) விடை தெரியவில்லை

11. ‘பெறு’ என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைக் கண்டறிக.

(A) பெறுகின்ற

(B) பெற்றவள்

(C) பெற்ற

(D) பெறும்

(E) விடை தெரியவில்லை

12. ‘நட’ என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடு.

(A) நடப்பவன்

(B) நடந்த

(C) நடந்து

(D) நடக்கும்

(E) விடை தெரியவில்லை

13. ‘பொறு’ என்னும் வேர்ச்சொல்லுக்கு உரிய வினைமுற்று தருக.

(A) பொறுத்து

(B) பொறுத்தார்

(C) பொறுத்தல்

(D) பொறுத்தி

(E) விடை தெரியவில்லை

14. வேர்ச்சொல்லைக் கண்டறிக

வந்தான்

(A) வந்து

(B) வந்த

(C) வா

(D) வருக

(E) விடை தெரியவில்லை

15. சொல்லின் முதலில் வரும் வினா எழுத்துக்களைக் கண்டறிக

(A) ஆ, ஓ

(B) ஓ, ஆ

(C) எ, யா

(D) அ, ஆ

(E) விடை தெரியவில்லை

16. சரியான விடையைத் தேர்வு செய்க.

'கடைத்தெரு எங்குள்ளது' என்ற வினாவிற்கு ____________ எனக் கூறல்.

(A) போகமாட்டேன்
(B) கால் வலிக்கும்
(C) வராமல் இருப்பேனா?
(D) வலப்பக்கம்
(E) விடை தெரியவில்லை

17. சரியான இனவெழுத்து அமைந்த சொல்லைக் கண்டறிக

(A) சூழ்க
(B) எஃகு
(C) தஞ்சம்
(D) பலகை
(E) விடை தெரியவில்லை

18. ஒலி மற்றும் பொருள் வேறுபாடறிந்து சரியான இணையைத் தெரிவு செய்க.

கூரை — கூறை

(A) புடவை, வேட்டி
(B) வேட்டி, வீட்டின் கூறை
(C) வீட்டின் கூரை, புடவை
(D) புடவை, வீட்டின் கூரை
(E) விடை தெரியவில்லை

19. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(1) பூ ____________ வீசும் (மனம்/மணம்).

(2) புலியின் ____________ சிவந்து காணப்படும் (கன்/கண்).

(A) மனம், கன்
(B) மணம், கன்
(C) மனம், கண்
(D) மணம், கண்
(E) விடை தெரியவில்லை

20. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

வீட்டு வாசலில் ____________ போட்டனர்.

(A) கோளம்
(B) கோலம்
(C) கோழம்
(D) படம்
(E) விடை தெரியவில்லை

21. நெடில், குறில், மாற்றம் அறிந்து, பொருள் வேறுபாடு கண்டறிக.

செய் — சேய்

(A) இன்புற்றார் — உயிர்நிலை
(B) கலந்தான் — போர்த்த
(C) செயலை செய்தல் — குழந்தை
(D) இலக்கியம் — இலக்கணம்
(E) விடை தெரியவில்லை

22. சந்திப் பிழையற்ற தொடரைக் கண்டறிக

(A) கடைக்குப் சென்றான்
(B) கடைக்கு சென்றான்
(C) கடைக்குச் சென்றான்
(D) கடைக்குத் சென்றான்
(E) விடை தெரியவில்லை

23. சேர்த்து எழுதுக.

நிலா + ஒளி

(A) நிலா ஒளி
(B) நிலஒளி
(C) நிலாவொளி
(D) நிலவு ஒளி
(E) விடை தெரியவில்லை

24. நன்றியறிதல் பிரித்தெழுதுக

(A) நன்றி + அறிதல்
(B) நன்றி + யறிதல்
(C) நன்று + அறிதல்
(D) நன்று + யறிதல்
(E) விடை தெரியவில்லை

25. பிரித்து எழுதுக — வேய்ங்குழல்

(A) வேம் + குழல்
(B) வேய் + குழல்
(C) வேய்ம் + குழல்
(D) வே + குழல்
(E) விடை தெரியவில்லை

26. அகரவரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.

(A) ஓசை, ஐந்து, அன்பு, இரக்கம்
(B) அன்பு, இரக்கம், ஐந்து, ஓசை
(C) இரக்கம், ஐந்து, அன்பு, ஓசை
(D) ஓசை, அன்பு, ஐந்து, இரக்கம்
(E) விடை தெரியவில்லை

27. பொருள் தரும் ஓர் எழுத்து

தலைவன்

(A) ஏ
(B) சீ
(C) ஐ
(D) யா
(E) விடை தெரியவில்லை

28. ஒரு — ஓர் சரியாக அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்க

(A) ஒரு மொழி உயிர்ப்போடு வாழ்வதற்குப்பேச்சுமொழி இன்றியமையாதது.

(B) ஓர் மொழி உயிர்ப்போடு வாழ்வதற்குப் பேச்சுமொழி இன்றியமையாதது.

(C) ஒரு மொழி உயிர்ப்போடு வாழ்வதற்குப் பேச்சுமொழி இன்றியமையாகின்றன.

(D) ஓர் மொழி உயிர்ப்போடு வாழ்வதற்குப் பேச்சுமொழி இன்றியமையானது.

(E) விடை தெரியவில்லை

29. ஊர்ப் பெயரின் மரூஉவை எழுதுக.

திருச்சிராப்பள்ளி

(A) திருவை

(B) திருமை

(C) திருச்சி

(D) திருச்சூர்

(E) விடை தெரியவில்லை

30. பொருத்தமான பொருள் சரியான இணையைத் தேர்க.

(A) மேரு — இமயமலை

(B) திகிரி — கருணை

(C) அளி — மலர்தல்

(D) அலர் — ஆணைச்சக்கரம்

(E) விடை தெரியவில்லை

31. கீழ்க்காணும் அடிக்கோடிட்ட சொற்களுக்கு இணையான வேறு சொற்களைக் கண்டறிக.

பசுப் போல் சாந்தமும் புலி போல் தீரமும் யானை போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

(A) களிறு, வீரமும், வேங்கை, அமைதியும், ஆ

(B) ஆ, அமைதியும், வேங்கை, வீரமும், களிறு

(C) வீரமும், வேங்கை, ஆ, களிறு, அமைதியும்

(D) வேங்கை, களிறு, ஆ, வீரமும், அமைதியும்

(E) விடை தெரியவில்லை

32. சொல், பொருள் பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | மண், பொன் | 1. | இடை இயற்சொல் |
| (b) | நடந்தான், வந்தான் | 2. | உரி இயற்சொல் |
| (c) | அவனை, அவனால் | 3. | பெயர் இயற்சொல் |
| (d) | மாநகர், நனிநன்று | 4. | வினை இயற்சொல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

(E) விடை தெரியவில்லை

33. எழுத்து வழக்கு

கடைக்குப் போயி காய்கறி வாங்கினேன்.

(A) கடைக்குப் போனதால் காய்கறி வாங்கினேன்

(B) கடைக்குப் போய்யி காய்கறி வாங்கினேன்

(C) கடைக்குப் போய் காய்கறி வாங்கினேன்

(D) கடைக்குப் பொய் காய்கறி வாங்கினேன்

(E) விடை தெரியவில்லை

34. இரு பொருள் தருக.

தாழ்

(A) புயம், சுவல்

(B) துவாரம், மூங்கில்

(C) வலிமை, அமிழ்

(D) குறைதல், தாழ்ப்பாள்

(E) விடை தெரியவில்லை

35. ஒருபொருட் பன்மொழிச் சொற்களை எழுதுக.

அந்த ஏழைக் குழந்தையின் கண்கள் ____________ காணப்படுகின்றன.

(A) குழி

(B) குழிந்தாழ்ந்து

(C) தாழ்ந்து

(D) உயர்ந்து

(E) விடை தெரியவில்லை

36. பண்புத்தொகைக்குப் பொருந்திய சொல்லைக் கண்டறிக.

(A) சந்நிதி

(B) நல்நிதி

(C) பொன்நிதி

(D) மாநிதி

(E) விடை தெரியவில்லை

37. ஒரு பொருள் தரும் பல சொற்கள்.

இரை, செல்வம், தகுதி, பயன், பாக்யம் ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) பொறு
(B) பேறு
(C) பெறு
(D) பேரு
(E) விடை தெரியவில்லை

38. உரிய பொருளைக் கண்டறிக.

விசும்பு

(A) வழக்கம்
(B) வானம்
(C) கலவை
(D) பாட்டு
(E) விடை ரியவில்லை

39. ஓரெழுத்து ஒரு மொழியின் பொருள்.

பே

(A) தூய்மை
(B) மேகம்
(C) மோத்தல்
(D) சோலை
(E) விடை தெரியவில்லை

40. சரியான எதிர்ச்சொல்லைத் தேர்க.

உதித்த

(A) மறைந்த
(B) நிறைந்த
(C) குறைந்த
(D) தோன்றிய
(E) விடை தெரியவில்லை

41. வாழ்க வாழ்க! இதில் இடம்பெறும் வியப்புக்குறி எத்தகைய உணர்ச்சியை வெளிப்படுத்துகிறது?

(A) வியப்பு

(B) அவலம்

(C) வாழ்த்து

(D) வைதல்

(E) விடை தெரியவில்லை

42. சரியான முற்றுப்புள்ளி இடப்பட்ட தொடரைக் கண்டறிக.

இமை நேரத்தில் மறைந்து விட்டது புழுங்கிற்று

(A) இமை நேரத்தில், மறைந்துவிட்டது, புழுங்கிற்று.

(B) இமை நேரத்தில், மறைந்து விட்டது. புழுங்கிற்று,

(C) இமை நேரத்தில் மறைந்து விட்டது. புழுங்கிற்று.

(D) இமை நேரத்தில் மறைந்துவிட்டது; புழுங்கிற்று.

(E) விடை தெரியவில்லை

43. அரைப்புள்ளி அமையும் இடங்களைக் கண்டறிக.

ஏளன மொழிகளைச் சிலுவையில் எழுதினார்கள் அதன் பின்னர் அவர் உயிர் நீத்தார்.

(A) ஏளன மொழிகளைச் சிலுவையில்; எழுதினார்கள்; அதன் பின்னர், அவர் உயிர் நீத்தார்.

(B) ஏளன மொழிகளைச் சிலுவையில் எழுதினார்கள் அதன் பின்னர்; அவர் உயிர் நீத்தார்.

(C) ஏளன மொழிகளைச் சிலுவையில் எழுதினார்கள்; அதன் பின்னர், அவர் உயிர் நீத்தார்.

(D) ஏளன மொழிகளைச் சிலுவையில்; எழுதினார்கள் அதன் பின்னர்; அவர் உயிர் நீத்தார்.

(E) விடை தெரியவில்லை

44. பொருத்தமானதைத் தேர்ந்தெடு.

கால்புள்ளி அமையும் இடங்கள் முறையே,

(A) விளி, வினையெச்சம்

(B) சொற்றொடர் இறுதி, முகவரி இறுதி

(C) நாள் இறுதி, சொற் குறுக்கம்

(D) சிறு தலைப்பு, நூற்பகுதி

(E) விடை தெரியவில்லை

45. கீழ்க்கண்ட சொல்லுக்குப் பொருத்தமான பன்மைச் சொல்லைத் தேர்ந்தெடு.

மாடு

(A) கூட்டம்

(B) மந்தை

(C) குழுமம்

(D) குவியல்

(E) விடை தெரியவில்லை

46. பொருத்துக.

(a) முறுக்கு — 1. எழுப்பு

(b) சுவர் — 2. தின்

(c) தண்ணீர் — 3. பருகு

(d) பால் — 4. குடி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

47. மரபு பிழையற்ற தொடர் எது?

(A) புலி முழங்கும்

(B) குயில் கூவும்

(C) குயில் அகவும்

(D) கழுதை கனைக்கும்

(E) விடை தெரியவில்லை

48. அஃறிணையில் பன்மையைக் குறிக்கும் பால் எது?

(A) பலர்பால்

(B) ஒன்றன்பால்

(C) பலவின் பால்

(D) பெண் பால்

(E) விடை தெரியவில்லை

49. பலர்பாலைக் குறிக்கும் சரியான தொடர் எது?

(A) அவர்கள் வந்தன

(B) அவர்கள் வந்தார்கள்

(C) அவர்கள் வந்தனள்

(D) அவர்கள் வந்தனன்

(E) விடை தெரியவில்லை

50. ஆண்பால் பெயர்ச்சொல் எவ்வகை வினைமுடிவைப் பெறும்?

(A) பலர்பால்

(B) ஆண்பால்

(C) பலவின்பால்

(D) ஒன்றன்பால்

(E) விடை தெரியவில்லை

51. ஒருமைப் பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(A) கப்பல்கள் பழுதடையாமல் நெடுங்காலம் உழைத்தன.

(B) கப்பல்கள் பழுதடையாமல் நெடுங்காலம் உழைக்கும்.

(C) கப்பல்கள் பழுதடையாமல் நெடுங்காலம் உழைப்பவை.

(D) கப்பல்கள் பழுதடையாமல் நெடுங்காலம் உழைத்தது.

(E) விடை தெரியவில்லை

52. கொன்றான் — எவ்வகை வினை?

(A) தன்வினை

(B) பிறவினை

(C) செய்வினை

(D) செயப்பாட்டுவினை

(E) விடை தெரியவில்லை

53. வேற்றுமைத் தொகைகளை வரிசைப்படுத்துக.

1. மலைக்குகை
2. திருவாசகம் படித்தான்
3. கம்பர் பாடல்
4. சிதம்பரம் சென்றான்

(A) 4, 2, 1, 3
(B) 2, 4, 3, 1
(C) 3, 1, 2, 4
(D) 2, 4, 1, 3
(E) விடை தெரியவில்லை

54. சொற்களை ஒழுங்குபடுத்தி, சொற்றொடர் ஆக்குக.

இலட்சியத்தை எனது அடைவேன் கல்வியால்.

(A) கல்வியால் எனது இலட்சியத்தை அடைவேன்.
(B) எனது இலட்சியத்தை அடைவேன் கல்வியால்.
(C) கல்வியால் அடைவேன் எனது இலட்சியத்தை.
(D) அடைவேன் இலட்சியத்தை எனது கல்வியால்.
(E) விடை தெரியவில்லை

55. சொற்களை ஒழுங்குபடுத்திச் சரியான தொடரைத் தேர்க.

(A) தமிழுணர்வு நிறைந்த கனிச்சாறு பாடல்களைக் கொண்டது.
(B) கனிச்சாறு பாடல்களைக் கொண்டது நிறைந்த தமிழுணர்வு.
(C) கனிச்சாறு தமிழுணர்வு நிறைந்த பாடல்களைக் கொண்டது.
(D) தமிழுணர்வு கனிச்சாறு நிறைந்த பாடல்களைக் கொண்டது.
(E) விடை தெரியவில்லை

56. சரியான கலைச் சொல்லைத் தேர்க.

'Volunteer'

(A) ஆய்வாளர்

(B) அறங்காவலர்

(C) தன்னார்வலர்

(D) ஆர்வலர்

(E) விடை தெரியவில்லை

57. Font என்பதன் கலைச் சொல்லைத் தேர்க

(A) எழுத்து

(B) எழுத்துரு

(C) எழுத்துப் பொறி

(D) எழுதுகோல்

(E) விடை தெரியவில்லை

58. கலைச் சொல் தருக.

Cartoon

(A) பொம்மலாட்டம்

(B) பேசும்படம்

(C) கருத்துப்படம்

(D) குறும்படம்

(E) விடை தெரியவில்லை

59. முகப்புப் பக்கம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு நிகரான ஆங்கிலச் சொல்

(A) Home row

(B) Home record

(C) Home page

(D) Home server

(E) விடை தெரியவில்லை

60. கலைச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்.

Land Breeze

(A) சுழல் காற்று
(B) கடற்காற்று
(C) நிலக்காற்று
(D) பெருங்காற்று
(E) விடை தெரியவில்லை

61. கலைச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்.

HOME SECRETARY

(A) சட்டமன்றச் செயலர்
(B) நாடாளுமன்றச் செயலர்
(C) உள்துறைச் செயலர்
(D) பதிவுத்துறைச் செயலர்
(E) விடை தெரியவில்லை

62. கலைச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்.

ARTICLES OF COMMERCE

(A) தகவல் மேலாண்மை
(B) ஊடக மேலாண்மை
(C) தலைமைப் பொறுப்பு
(D) பொருள் மேலாண்மை
(E) விடை தெரியவில்லை

63. கலைச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்.

ACTINOTHERAPY

(A) கதிர் மருத்துவம்
(B) இயற்கை மருத்துவம்
(C) நவீன மருத்துவம்
(D) சித்த மருத்துவம்
(E) விடை தெரியவில்லை

64. கலைச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல் அறிக.

Philosophy

(A) அசை
(B) எழுத்துரு
(C) தத்துவம்
(D) படைப்பு
(E) விடை தெரியவில்லை

65. SOLIDITY RATIO என்பதன் கலைச் சொல்

(A) திண்மை
(B) திண்மை விழுக்காடு
(C) திடத்தன்மை
(D) திடத்தன்மைப் பரப்பு
(E) விடை தெரியவில்லை

66. தமிழ்நாட்டில் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியருக்குத் தமிழ் இலக்கியங்களைப் படிக்கின்ற ஆர்வத்தையும் படைக்கின்ற ஆற்றலையும் உருவாக்க வேண்டும் என்பது தமிழ்நாடு அரசின் நோக்கமாகும். அதற்காகத் தமிழ் வளர்ச்சித்துறை முன்னெடுக்கும் நிகழ்வு ___________.

(A) இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை
(B) முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்மன்றம்
(C) தமிழ்நாடு நாள் விழா
(D) குறள் பரிசு
(E) விடை தெரியவில்லை

67. “காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்” — என்னும் பழமொழி விளக்கும் கருத்து

(A) வாய்ப்புகள் உன்னைத் தேடிவரும்

(B) காற்றடிக்கும் திசையில் செல்லாதே

(C) வாய்ப்பு கிடைக்கும்போதே பயன்படுத்திக்கொள்

(D) காற்றுக்கும் வேலியுண்டு

(E) விடை தெரியவில்லை

68. பின்வரும் பழமொழியின் பொருளறிக.

யானைக்கும் அடி சறுக்கும்.

(A) சோம்பேறியாக இருத்தல்

(B) கவனமாக முன்னேறல்

(C) கோழைத்தனம்

(D) வீர உணர்வு

(E) விடை தெரியவில்லை

69. பின்வரும் பழமொழியின் பொருளறிக.

எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

(A) கோவம்

(B) சோர்வு

(C) விடாமுயற்சி

(D) நிதானம்

(E) விடை தெரியவில்லை

70. ‘இவன் பெரிய அரிச்சந்திரன்’ — என்னும் மரபுத்தொடர் விளக்கும் பொருள்

(A) உயர்வானவன்

(B) உண்மையே பேசுபவன்

(C) மதிப்புமிக்கவன்

(D) கவலையற்றவன்

(E) விடை தெரியவில்லை

71. “கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டான்” — என்ற மரபுத்தொடர் விளக்கும் கருத்து யாது?

(A) பேச்சுக்கு அடங்கி நடக்கும் தன்மையுடையவன்.

(B) எவருக்கும் பயப்படத்தேவையில்லை.

(C) யார் பேச்சையும் கேட்கமாட்டான்.

(D) பேச்சைத் தட்டமாட்டான்.

(E) விடை தெரியவில்லை

72. ‘மரபுத்தொடரின் பொருளறிதல்’

‘கர்ணன் தோற்றான்போ’ — என்ற தொடர் விளக்கும் கருத்து.

(A) வெற்றி பெறவில்லை

(B) வீரம் மிக்கவன்

(C) பொறுப்பு இல்லாதன்

(D) வள்ளல் தன்மை

(E) விடை தெரியவில்லை

73. உவமைத் தொடர் உணர்த்தும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

‘மடை திறந்த வெள்ளம் போல’

(A) தடையின்றி மிகுதியாக

(B) தற்செயல் நிகழ்வு

(C) எதிர்பாரா நிகழ்வு

(D) வெளிப்படைத்தன்மை

(E) விடை தெரியவில்லை

74. பொருத்தமானதைத் தேர்ந்தெடு.

'கண்ணினைக் காக்கும் இமை போல'

என்ற உவமைத்தொடர் உணர்த்தும் பொருள்.

(A) நெருங்கி பழகாமை

(B) முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்

(C) பாதுகாப்பது

(D) தோல்வியே வெற்றியின் முதல்படி

(E) விடை தெரியவில்லை

75. பொருத்தமானதைத் தேர்ந்தெடு.

'தாமரை இலை நீர் போல' — உவமைக்கான பொருள் ___________.

(A) வாரியிறைப்பது

(B) சோம்பல் தனம்

(C) இளமையில் கல்

(D) யாரிடமும் நெருங்கி உறவாடாமை

(E) விடை தெரியவில்லை

செய்தித்தாள்

பள்ளிகளிலேயே மாணவர்களுக்கு வங்கிக்கணக்குகளைத் தொடங்குவதற்கும், ஆதார் எண்களை இணைப்பதற்குமான வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழகத்தில் அனைத்து பள்ளிகளிலும் 1 முதல் பிளஸ் 2 வரை பயிலும் அனைத்து மாணவர்களும் இடைநிற்றல் இன்றி தொடர்ந்து கல்வி பயில ஏதுவாக உதவி மற்றும் ஊக்கத்தொகைகள் வழங்கப்படுகின்றன. பள்ளிகளிலேயே வங்கிக்கணக்கு தொடங்க வயது அடிப்படையில் 2 நிலைகளில் பணிகள் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, 5 முதல் 10 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு புதிய வங்கிக்கணக்கு அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் பெயரில் இணைக் கணக்காக தொடங்கப்படும். மாணவர், பெற்றோர் இணைந்து இந்த கணக்கை பராமரிக்க முடியும். ஆரம்பத்தொகை ஏதுமில்லாத கணக்காக இருக்கும்.

பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையளிக்கவும்.

76. வங்கிக் கணக்கோடு இணைக்கப்படவேண்டிய ஆவணம் என்ன?

(A) ஓட்டுநர் உரிமம்

(B) அடையாள அட்டை

(C) குடும்ப அட்டை

(D) ஆதார் எண்கள்

(E) விடை தெரியவில்லை

77. பள்ளியிலேயே வங்கிக்கணக்கு துவங்க அளிக்கப்படும் வாய்ப்புகள்

(A) 1 முதல் 8ம் வகுப்பு வரை பயில்வோர்

(B) 6 முதல் 10ம் வகுப்பு வரை பயில்வோர்

(C) 1 முதல் 12ம் வகுப்பு வரை பயில்வோர்

(D) இவர்கள் யாருமில்லை

(E) விடை தெரியவில்லை

78. பள்ளிகளிலேயே வங்கிக்கணக்கு தொடங்குவதற்கான காரணம் என்ன?

(A) உதவித்தொகை பெறுவதற்காக

(B) கடன் பெறுவதற்காக

(C) ஊக்கத்தொகை பெறுவதற்காக

(D) இவற்றில் ஏதுமில்லை

(E) விடை தெரியவில்லை

79. வங்கிக்கணக்கு துவங்க அளிக்கப்படும் குறைந்தபட்ச வயது வரம்பு

(A) 5 முதல் 10 வயது வரை

(B) 1 முதல் 10 வயது வரை

(C) 6 முதல் 12 வயது வரை

(D) 8 முதல் 12 வயது வரை

(E) விடை தெரியவில்லை

80. பள்ளியிலேயே தொடங்கப்படும் வங்கிக் கணக்குகளுக்கான ஆரம்பத்தொகை

(A) 200 ரூபாய்

(B) 500 ரூபாய்

(C) 1,000 ரூபாய்

(D) தொகை ஏதுமில்லை

(E) விடை தெரியவில்லை

81. பொருத்துக.

(a) Creative Writing — 1. அறிக்கை எழுதுதல்

(b) Report Writing — 2. தொழில்நுட்ப எழுத்தாக்கம்

(c) Technical Writing — 3. கட்டுரை எழுதுதல்

(d) Essay Writing — 4. படைப்பாற்றல் எழுத்தாக்கம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 1 | 4 | 2 | 3 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

82. ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெழுதுக.

MILKY WAY

(A) அண்டம்

(B) பால் வீதி

(C) சூரியன்

(D) நட்சத்திரம்

(E) விடை தெரியவில்லை

83. 'Insurance' — என்னும் சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்

(A) உறுதிப்பத்திரம்
(B) காப்பீடு
(C) முகவர்
(D) பயனீட்டாளர்
(E) விடை தெரியவில்லை

84. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை அறிக.

(A) Download — தரவிறக்கம்
(B) Download — வட்டு
(C) Download — இணையம்
(D) Download — கீழே இறங்கு
(E) விடை தெரியவில்லை

85. ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லை எழுதுக.

TARGET LANGUAGE

(A) விளக்கு மொழி
(B) இல்லாத மொழி
(C) இலக்கு மொழி
(D) வியக்கும் மொழி
(E) விடை தெரியவில்லை

86. 'கனிச்சாறு' — யார் எழுதிய கவிதை நூல்?

(A) கவிக்கோ அப்துல் ரகுமான்
(B) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
(C) கவியரசர் கண்ணதாசன்
(D) பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்
(E) விடை தெரியவில்லை

87. திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர் யார்?

(A) தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்
(B) கா. அப்பாத்துரையார்
(C) வ.சுப. மாணிக்கனார்
(D) இரா. இளங்குமரனார்
(E) விடை தெரியவில்லை

88. அகரவரிசையில் எழுதுக.

தை, தீ, தேன், தட்டு, துணி.

(A) தட்டு, தீ, துணி, தேன், தை
(B) தீ, தட்டு, தேன், துணி, தை
(C) துணி, தேன், தை, தீ, தட்டு
(D) தட்டு, தேன், துணி, தை, தீ
(E) விடை தெரியவில்லை

89. உ.வே. சாமிநாதர் பிறந்த ஊரின் பெயர் ____________.

(A) உத்தமபாளையம்
(B) உத்தமதானபுரம்
(C) உடுமலைப்பேட்டை
(D) உதகமண்டலம்
(E) விடை தெரியவில்லை

90. 'ஒன்று' என்னும் தமிழ்ச்சொல் மலையாளத்தில் ____________ என அழைக்கப்படுகிறது.

(A) ஒண்ணு
(B) ஒகடி
(C) ஒந்து
(D) ஒஞ்சி
(E) விடை தெரியவில்லை

91. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.

மொரிசியஸ், இலங்கை உள்ளிட்ட நாடுகளின் பணத்தாள்களில் ____________ மொழி இடம்பெற்றுள்ளது.

(A) தமிழ் (B) இந்தி

(C) தெலுங்கு (D) கன்னடம்

(E) விடை தெரியவில்லை

92. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்தெழுது.

எண்பது விழுக்காடு அளவுக்குத் திராவிட மொழிக்கூறுகளைக் கொண்டுள்ள ஒரே திராவிட மொழி __________.

(A) தெலுங்கு (B) கன்னடம்

(C) மலையாளம் (D) தமிழ்

(E) விடை தெரியவில்லை

93. தமிழ்மொழியில் இன்று நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் மிகப் பழமையான நூல் ____________.

(A) தொல்காப்பியம் (B) நன்னூல்

(C) அகத்தியம் (D) வீரகேசரி

(E) விடை தெரியவில்லை

94. 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'

மேற்கண்ட தொடர் இடம்பெற்றுள்ள நூல் எது ?

(A) கொன்றை வேந்தன் (B) ஆத்திச்சூடி

(C) மூதுரை (D) நல்வழி

(E) விடை தெரியவில்லை

95. கொடுக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு நூலின் பெயரைக் கண்டறிக.

1. பதினென்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
2. நானூறு பாடல்களைக் கொண்டது.
3. ஒவ்வொரு பாடலும் நான்கு அடிகளைக் கொண்டிருக்கும்.
4. இதன் ஆசிரியர் முன்றுறை அரையனார்.

(A) புறநானூறு
(B) பழமொழி நானூறு
(C) நற்றிணை நானூறு
(D) நாலடியார்
(E) விடை தெரியவில்லை

96. சரியான விடையைத் தேர்க.

திருக்குறள் போன்றே முப்பால் பகுப்பு கொண்ட நூல் எது?

(A) நாலடியார்
(B) ஏலாதி
(C) மூதுரை
(D) நான்மணிக்கடிகை
(E) விடை தெரியவில்லை

97. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்

யானையால் யானையாத் தற்று.

இக்குறட்பாவில் பயின்று வரும் அணி ____________.

(A) உவமை அணி
(B) எடுத்துக்காட்டு உவமை அணி
(C) உருவக அணி
(D) வஞ்சப்புகழ்ச்சி அணி
(E) விடை தெரியவில்லை

98. பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்தெழுதுக.

வறியார்க்குஒன்று ஈவதே __________ மற்று எல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

(A) அறிவு
(B) அன்பு
(C) ஈகை
(D) மாட்சி
(E) விடை தெரியவில்லை

99. பொருள் தருக :

இன்னாச் சொல்

(A) இழிவான சொல்
(B) எண்ணுப் பெயர்
(C) கடுஞ்சொல்
(D) ஏன் என்ற சொல்
(E) விடை தெரியவில்லை

100. விடுபட்ட சொல்லை எழுதுக.

'அழுக்காறு அவா __________ இன்னாச்சொல் நான்கும்' — எது?

(A) வெகுளி
(B) ஆக்கம்
(C) அறம்
(D) மறம்
(E) விடை தெரியவில்லை

## பகுதி-ஆ (பொது அறிவு)

## Part-B (General Studies)

**வினாக்கள் : 101–200** **மொத்த மதிப்பெண்கள் : 150**

**Questions : 101–200** **Total Marks : 150**

101. Which of the following statements are true about Five year plan?
பின்வரும் ஐந்தாண்டுக் காலத் திட்டத்தின் உண்மை எவை?

1. The first five year plan launched on April 1 1951
முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஏப்ரல் 1, 1951ல் அமல்படுத்தப்பட்டது.

2. Tenth five year plan (2002-03) to (2006-07) fixed a target of 10% rank of growth per annum.
பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (2002-03), (2006-07) ஆண்டு வளர்ச்சி விகிதத்தை 10% சதவீதம் அதிகரிக்க இலக்கு நிர்ணயித்தது.

3. The Eleventh Five year plan (2007-12) achieved 7.9% growth rate per annum
பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007-12) ஆனது 7.9% ஆண்டு வளர்ச்சி விகிதத்தை அடைந்தது.

4. The Twelfth five year plan (2012-2017) aims at 9% rate of growth per annum
பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012-2017) ஆனது 9% ஆண்டு வளர்ச்சி விகிதத்தை இலக்காக வைத்தது.

(A) [1] and [3] are true
[1] மற்றும் [3] சரி

(B) [1] and [2] are true
[1] மற்றும் [2] சரி

(C) [1] [2] [3] and [4] are true
[1] [2] [3] மற்றும் [4] சரி

(D) [1] [3] and [4] are true
[1] [3] மற்றும் [4] சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

102. Identify the correct pair(s) :
சரியானவற்றை தேர்வு செய்க.

1. Pro-people = Education
மக்கள் சார்பு = கல்வி

2. Pro-Activity = Citizen need
சார்புச் செயல்பாடு = குடிமக்கள் தேவை

3. Empowering = Women
மேம்பாடு = பெண்கள்

4. Human Capital = Society
மனித மூலதனம் = சமூகம்

(A) [1] and [3] are correct
[1] மற்றும் [3] சரி

(B) [1] and [2] are correct
[1] மற்றும் [2] சரி

(C) [2] and [3] are correct
[2] மற்றும் [3] சரி

(D) [3] and [4] are correct
[3] மற்றும் [4] சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

103. The First Vice-chairman of the NITI Aayog was __________.
நிதி ஆயோக்கின் முதலாவது துணைத்தலைவர் திரு __________ ஆவார்.

(A) K.C. Neogy
K.C. நியோகி

(B) K. Santhanam
K. சந்தானம்

(C) Arvind Panangariya
அரவிந்த் பனகரியா

(D) Mahaveer Tyagi
மகாவீர் தியாகி

(E) Answer not known
விடை தெரியவில்லை

104. Choose the right answer of the following:
பின்வருவனவற்றுள் சரியானதை எழுதுக.

The Deen Dayal Upadhyaya-Grameen Kaushalya Yojana (DDU-GKY) was announced and its objective was ___________.

தீன்-தயாள் உபாத்தியாயா கிராமீன் கௌசல்யா யோஜனா (DDU-GKY) தொடங்கப்பட்ட ஆண்டு ___________ மற்றும் அதன் நோக்கம் ___________.

(i) October 23 - 2018
அக்டோபர் 23 - 2018

(ii) September 25 - 2014
செப்டம்பர் 25 - 2014

(iii) Poverty reducing programme
வறுமை ஒழிப்புத் திட்டம்

(iv) Placement linked training programme
வேலைவாய்ப்பிற்கான பயிற்சித் திட்டம்

(A) [i] and [iii] are correct
[i] மற்றும் [iii] சரி

(B) [ii] and [iii] are correct
[ii] மற்றும் [iii] சரி

(C) [ii] and [iv] are correct
[ii] மற்றும் [iv] சரி

(D) [iii] and [iv] are correct
[iii] மற்றும் [iv] சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

105. Match the following :

கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Permanent Settlement Implemented<br>நிரந்த நில உடைமை அறிமுகம் | 1. | Madras, Bombay<br>மெட்ராஸ், பம்பாய் |
| (b) | Mahalwari System<br>மகல்வாரி நில உடைமை | 2. | Bengal, Bihar<br>பெங்கால், பீகார் |
| (c) | Zamindari system<br>ஜமீன்தாரி நில உடைமை | 3. | Part of Central India, Punjab<br>மத்திய இந்தியப்பகுதி, பஞ்சாப் |
| (d) | Ryotwari system<br>ரயத்வாரி நில உடைமை | 4. | Odisha<br>ஒடிசா |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (2) | (3) | (1) | (4) |
| (B) | (1) | (2) | (3) | (4) |
| (C) | (3) | (2) | (4) | (1) |
| (D) | (1) | (4) | (2) | (3) |

(E) Answer not known
விடை தெரியவில்லை

106. Choose the right matches of occupational distribution of working population with sectors:

சரியான இணையை கண்டுபிடித்து எழுதுக. துறைவாரியான தொழில் கட்டமைப்பு சதவிகிதம்

(1) 1991 Agricultural Sector – 66.7%
1991 வேளாண்மை துறை 66.7%

(2) 1991 Industrial Sector – 48.4%
1991 தொழில் துறை 48.4%

(3) 1991 Service Sector – 26.4%
1991 பணித் துறை 26.4%

(4) 1991 Other Sector – 10.2%
1991 இதர துறைகள் 10.2%

(A) [1] and [4] correct
[1] மற்றும் [4] சரி

(B) [1] and [3] correct
[1] மற்றும் [3] சரி

(C) [4] and [3] correct
[4] மற்றும் [3] சரி

(D) [2] and [3] correct
[2] மற்றும் [3] சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

107. __________ mission focuses on maternal and child health care.

__________ அமைப்பு மகப்பேறு மற்றும் குழந்தை நலன் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்குகிறது.

(A) Bharat Nirman Yojana 2005
பாரத் நிர்மான் யோஜனா 2005

(B) Rajiv Awas Yojan 2009
ராஜீவ் ஆவாஸ் யோஜனா 2009

(C) National Rural Health Mission 2005
தேசிய ஊரக நல அமைப்பு 2005

(D) National Food Security Scheme 2013
தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் 2013

(E) Answer not known
விடை தெரியவில்லை

108. Which industry earns the maximum foreign exchange through export in India?

இந்தியாவில் ஏற்றுமதி மூலம் கீழ்கண்ட எந்த தொழில்துறையிலிருந்து அன்னிய செலவாணி அதிகம் கிடைக்கின்றது?

(A) Textile
துணி

(B) Steel
இரும்பு

(C) Rubber
ரப்பர்

(D) Car
கார்

(E) Answer not known
விடை தெரியவில்லை

109. Match the following :

பின்வருவனவற்றைப் பொருத்துக :

2024-ல் இந்திய மாநில அளவிலான கல்வியறிவு

State wise literacy rate in India in 2024.

| | | | |
|---|---|---|---|
| (a) | Tamil Nadu<br>தமிழ்நாடு | 1. | 82.4<br>82.4 |
| (b) | Gujarat<br>குஜராத் | 2. | 80.5<br>80.5 |
| (c) | Sikkim<br>சிக்கிம் | 3. | 82.2<br>82.2 |
| (d) | West Bengal<br>மேற்கு வங்காளம் | 4. | 82.9<br>82.9 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (1) | (3) | (2) |
| (B) | (3) | (2) | (1) | (4) |
| (C) | (1) | (2) | (3) | (4) |
| (D) | (2) | (1) | (3) | (4) |

(E) Answer not known
விடை தெரியவில்லை

110. The scheme which provides safe and adequate drinking water through individual household tap connection is ___________.
ஒவ்வொரு வீட்டிற்கும் குழாய் மூலமாக சுத்தமான, போதுமான குடிநீர் வழங்கும் திட்டமானது

(A) PM-Ujjwala Yojana
பிரதம மந்திரி-உஜ்வாலா யோஜனா

(B) Jal Jeevan Mission
ஜல் ஜீவன் மிஸன்

(C) Swacch Bharat Mission
ஸ்வச் பாரத் மிஸன்

(D) Ayushman Bharat Scheme
ஆயுஸ்மான் பாரத் திட்டம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

111. Assertion [A] : Tamil Nadu's "Makkalai Thedi Maruthuvam" scheme delivers healthcare services at people's doorsteps.

கூற்று [A] : தமிழ்நாட்டின் "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டம், மக்களின் வீட்டு வாசல்படியில் சுகாதார சேவைகளை வழங்குகிறது.

Reason [R] : The scheme aims to improve accessibility to healthcare for rural and urban population.

காரணம் [R] : இந்த திட்டம் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு மருத்துவ வசதியை அணுகுவதற்கான மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்டுள்ளது.

(A) Both [A] and [R] are true and [R] explains [A]

[A] மற்றும் [R] இரண்டும் உண்மை மற்றும் [R] என்பது [A]க்கு சரியான விளக்கம்

(B) Both [A] and [R] are true but [R] does not explain [A]

[A] மற்றும் [R] இரண்டும் உண்மை ஆனால் [R] என்பது [A]க்கு சரியான விளக்கமில்லை

(C) [A] is true but [R] is false

[A] உண்மை ஆனால் [R] தவறானது

(D) [A] is false but [R] is true

[A] தவறானது ஆனால் [R] சரியானது

(E) Answer not known
விடை தெரியவில்லை

112. Choose the right matches of the following:
பின்வருவனவற்றில் சரியான பொருத்தங்களை கண்டறிக

1. Minutes on Indian Education – Lord MaCauley
இந்திய கல்வி குறித்த குறிப்புகள் லார்ட் மெக்காலே

2. Free Education to the Girls in the age group of 6 years to 14 years – Sir John Sargeant
6 முதல் 14 வயது வரையுள்ள சிறுமிகளுக்குண்டான இலவசக் கல்வி – சர் ஜான் சர்ஜன்ட்

3. Intermediate Examination was removed from the Universities and included in the Board of Higher Secondary Education – Dr. S. RadhaKrishnan
பல்கலைகழகத்தில் உள்ள இடைநிலைத் தேர்வினை நீக்கிவிட்டு அதனை உயர்கல்வி வாரியத்தினுள் சேர்த்தல் – Dr. S. இராதாகிருஷ்ணன்

4. Created a Model school in every district – Sir Charles Wood
ஒவ்வொரு மாவட்டத்திலும் "மாதிரிப்பள்ளி"-யினை உருவாக்குதல் – சர் சார்லஸ் வுட்

(A) [1] and [3] are correct
[1] மற்றும் [3] சரி

(B) [1] and [2] are correct
[1] மற்றும் [2] சரி

(C) [2] and [3] are correct
[2] மற்றும் [3] சரி

(D) [3] and [4] are correct
[3] மற்றும் [4] சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

113. Choose the right matches:
பின்வருவனவற்றில் பொருத்தமான இணையைத் தேர்ந்தெடு

1. Manavalakurichi – Ilmenite
மணவாளகுறிச்சி இல்மனைட்

2. Kanjamalai – Iron ore
கஞ்சமலை இரும்பு தாது

3. Vadipatti – Copper
வாடிப்பட்டி செப்பு

4. Kariapatti – Magnesite
காரியாபட்டி மேக்னசைட்

(A) [1] and [3] are correct
[1] மற்றும் [3] சரி

(B) [1] and [2] are correct
[1] மற்றும் [2] சரி

(C) [2] and [3] are correct
[2] மற்றும் [3] சரி

(D) [3] and [4] are correct
[3] மற்றும் [4] சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

114. Which of the following statement(s) is/are true about Dr. A Lakshmanaswami commission of 1952?

1952-ம் ஆண்டைய Dr. A இலட்சுமணசாமி கமிஷன் பற்றிய உண்மையான கூற்று(கள்) யா(து)வை ?

(i) This commission recommended diversified courses in high schools.

இந்த கமிஷன் உயர்நிலைப் பள்ளிகளில் பன்முகப்படுத்தப்பட்ட பாடத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.

(ii) Special schools were introduced as a result of the recommendation.

இக்கமிஷனின் பரிந்துரையின் விளைவாக சிறப்புப் பள்ளிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

(iii) Home Science was included as a subject for women's education

பெண்கள் கல்விக்கான பாடமாக மனை அறிவியல் சேர்க்கப்பட்டது.

(iv) Dual-language formula was introduced and students were insisted to study second language in high schools.

இரட்டை மொழி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் இரண்டாம் மொழியை படிக்க வலியுறுத்தப்பட்டனர்.

(A) (i) only
(i) மட்டும் சரி

(B) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும் சரி

(C) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும் சரி

(D) (i), (ii) and (iii) only
(i), (ii) மற்றும் (iii) மட்டும் சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

115. Which Sustainable Development Goal's (SDG) target is primarily focused on the Tamil Nadu Health System Reform project?
தமிழ்நாடு சுகாதார அமைப்பு சீர்திருத்தத் திட்டம் எந்த நிலையான வளர்ச்சி இலக்கினை நோக்கமாகக் கொண்டுள்ளது ?

(A) SDG – 2
நிலையான வளர்ச்சி இலக்கு – 2

(B) SDG – 3
நிலையான வளர்ச்சி இலக்கு – 3

(C) SDG – 6
நிலையான வளர்ச்சி இலக்கு – 6

(D) SDG – 7
நிலையான வளர்ச்சி இலக்கு – 7

(E) Answer not known
விடை தெரியவில்லை

116. Choose the right matches:
பின்வருவனவற்றில் சரியான இணையைத் தேர்ந்தெடு

1. National Human Rights Commission – 1993
தேசிய மனித உரிமை ஆணையம் 1993

2. Central Information Commission – 2004
மத்திய தகவல் ஆணையம் 2004

3. Central Vigilance Commission – 1964
மத்திய விசாரணை ஆணையம் 1964

4. National Commission for women – 1991
தேசிய மகளிர் ஆணையம் 1991

(A) [1] and [2] are correct
[1] மற்றும் [2] சரி

(B) [1] and [3] are correct
[1] மற்றும் [3] சரி

(C) [2] and [4] are correct
[2] மற்றும் [4] சரி

(D) [3] and [4] are correct
[3] மற்றும் [4] சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

117. Assertion [A] : Family court is established for speedy trial and settlements of family disputes.

கூற்று [A] : குடும்ப பிரச்சனைகளை விரைவாக விசாரித்து தீர்வு காண குடும்ப நீதிமன்றம் நிறுவப்பட்டுள்ளது.

Reason [R] : In 1984, Law Commission of India submitted its 59th report to Government of India for passing exclusive Act to settle the family matters.

காரணம் [R] : 1984 ஆம் ஆண்டு இந்திய சட்ட ஆணையம் தனது 59 ஆவது அறிக்கையினை குடும்ப விவகாரங்களைத் தீர்ப்பதற்கான பிரத்யேக சட்டத்தினை இயற்றுவதற்கான முக்கியத்துவத்தினை இந்திய அரசிடம் சமர்பித்தது.

(A) [A] is true [R] is false

[A] சரி [R] தவறு

(B) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

[A] மற்றும் [R] சரி. மேலும் [R] ஆனது [A]யினுடைய சரியான விளக்கம் ஆகும்

(C) [A] is false [R] is true

[A] தவறு [R] சரி

(D) Both [A] and [R] are true but [R] is not correct explanation of [A]

[A] மற்றும் [R] சரி ஆனால் [R] ஆனது [A]யினுடைய சரியான விளக்கம் அல்ல

(E) Answer not known
விடை தெரியவில்லை

118. Identify the correct statement about Gaganyaan project:
ககன்யான் திட்டத்தை பற்றிய சரியான அறிக்கையை தேர்வு செய்க.

1. Gaganyaan project envisages demonstration of human space flight capability.
ககன்யான் திட்டத்தின் நோக்கம் மனித விண்வெளிப் பயணத்தின் திறமையை வெளிப்படுத்துவதாகும்.

2. It is planning to launch a crew of 3 members
இது மூன்று வல்லுநர்களைக் கொண்ட குழுவுடன் விண்கலத்தினை ஏவ திட்டமிடப்பட்டிருக்கிறது.

3. It is planned to launch to an orbit of 4000 km for a 7 day mission
4000 கி.மீ. சுற்றுப்பாதையில் 7 நாள் பயணத்திற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

(A) All the three statements are correct
மூன்று கூற்றுகளும் சரியே

(B) [1] and [2] are correct
[1] மற்றும் [2] மட்டும் சரி

(C) [1] and [3] are correct
[1] மற்றும் [3] மட்டும் சரி

(D) [2] and [3] are correct
[2] மற்றும் [3] மட்டும் சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

119. One among the following is not a target group under the Chief Ministers Thayumanavar scheme. Identify.
தமிழ்நாடு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் பின்வருவனவற்றில் எது இலக்கு வைக்கப்பட்ட குழு அல்ல? கண்டறிக.

(A) Destitute Individual
ஆதரவற்றவர்கள்

(B) Elderly persons living alone
தனியாக வசிக்கும் முதியவர்கள்

(C) Single-parent families
ஒற்றை பெற்றோர் குடும்பங்கள்

(D) Middle-income families
நடுத்தர வருமான குடும்பங்கள்

(E) Answer not known
விடை தெரியவில்லை

120. Match the following:
பொருத்துக.

| உதவித்திட்டம் | | பெயர் |
|---|---|---|
| (a) Widow Remarriage Assistance Scheme<br>விதவை மறுமண உதவித் திட்டம் | 1. | Mother Teresa<br>அன்னை தெரசா |
| (b) Marriage Assistance Scheme for the daughter of poor widows<br>ஏழை விதவைகளின் மகள்களுக்கான திருமண உதவித் திட்டம் | 2. | Dr. Muthu Lakshmi Reddy<br>டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி |
| (c) Marriage Assistance scheme for destitute women<br>ஆதரவற்ற பெண்களுக்கான திருமண உதவித் திட்டம் | 3. | E.V.R. Maniyammayar<br>ஈ.வே.ரா. மணியம்மையார் |
| (d) Inter-caste Marriage Assistance Scheme<br>கலப்புத் திருமண உதவித்திட்டம் | 4. | Dr. Dharmabal Ammaiyar<br>டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (1) | (2) | (3) | (4) |
| (B) | (4) | (3) | (1) | (2) |
| (C) | (4) | (3) | (2) | (1) |
| (D) | (3) | (4) | (2) | (1) |

(E) Answer not known
விடை தெரியவில்லை

121. "The temple entry Authorisation and Indeminity Act" was passed in ___________.

கோயில் நுழைவு அங்கீகாரம் (ம) இழப்பீடு சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ___________.

(A) 1938 (B) 1940

(C) 1939 (D) 1941

(E) Answer not known
விடை தெரியவில்லை

122. Match the following :
பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | Widow Re-marriage Act passed on<br>விதவைகள் மறுமணச் சட்டம் நிறைவேற்றப்பட்டது | 1. | 1952<br>1952 |
| (b) | Family Planning Scheme Started<br>குடும்பக் கட்டுப்பாடு திட்டம் துவக்கப்பட்டது | 2. | 1992<br>1992 |
| (c) | Dowry Prohibition Act passed on<br>வரதட்சணை தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது | 3. | 1856<br>1856 |
| (d) | Cradle Baby Scheme implemented on<br>தொட்டில் குழந்தைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது | 4. | 1961<br>1961 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (1) | (4) | (2) |
| (B) | (2) | (4) | (1) | (3) |
| (C) | (4) | (2) | (3) | (1) |
| (D) | (1) | (3) | (2) | (4) |

(E) Answer not known
விடை தெரியவில்லை

123. Assertion [A] : Dr. Muthulakshmi Ammaiyar to become the first woman legislator in India in 1926.

கூற்று [A] : டாக்டர். முத்துலட்சுமி அம்மையார் 1926ல் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் ஆனார்.

Reason [R] : Justice party government was the first to approve participation of women in the electoral politics in 1921.

காரணம் [R] : நீதிக்கட்சி ஆட்சியில் தான் முதன் முதலாக தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை 1921ல் அங்கீகரித்தது.

(A) [A] is false [R] is true

[A] தவறு [R] சரி

(B) [A] is true [R] is false

[A] சரி [R] தவறு

(C) Both [A] and [R] are false

[A] மற்றும் [R] இரண்டும் தவறு

(D) Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

[A] மற்றும் [R] சரியானவை மற்றும் காரணம் [R] கூற்று [A] க்கு சரியான விளக்கமாகும்.

(E) Answer not known
விடை தெரியவில்லை

124. Ayothi Dasar was born in __________.
அயோத்தி தாசர் பிறந்த இடம் __________.

(A) Chennai
சென்னை

(B) Ayodhya
அயோத்தி

(C) Calcutta
கல்கத்தா

(D) Maharashtra
மகாராஷ்டிரா

(E) Answer not known
விடை தெரியவில்லை

125. Dr. Muthulakshmi started the Cancer Relief Hospital in __________.
டாக்டர் முத்துலட்சுமி புற்றுநோய் நிவாரண மருத்துவமனை தொடங்கிய ஆண்டு

(A) 1929

(B) 1939

(C) 1949

(D) 1959

(E) Answer not known
விடை தெரியவில்லை

126. Lord William Bentinck passed an Act in 1829 to abolish sati due to the efforts of :
1829 ஆம் ஆண்டு வில்லியம் பெண்டிங் பிரபு சதி என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை சட்டபூர்வமாக ஒழிக்க உறுதுணையாக இருந்தவர்?

(A) Annie Besant Ammaiyar
அன்னிபெசன்ட் அம்மையார்

(B) Keshab Chandra Sen
கேசப் சந்திரசென்

(C) Dayanandha Saraswathi
தயானந்த சரஸ்வதி

(D) Raja Rammohan Roy
இராஜாராம்மோகன் ராய்

(E) Answer not known
விடை தெரியவில்லை

127. Choose the right matches :
சரியான இணைகளை கண்டறிக :

1. Vellore Revolt – 1816
வேலூர் புரட்சி 1816

2. The Kol uprising – 1841
கோல்களின் கிளர்ச்சி 1841

3. Santhal Hool (rebellion) – 1855
சந்தால் கிளர்ச்சி 1855

4. Great Rebellion – 1857
பெருங்கிளர்ச்சி 1857

(A) [1] and [3] are correct
[1] மற்றும் [3] மட்டும் சரி

(B) [1] and [2] are correct
[1] மற்றும் [2] மட்டும் சரி

(C) [2] and [3] are correct
[2] மற்றும் [3] மட்டும் சரி

(D) [3] and [4] are correct
[3] மற்றும் [4] மட்டும் சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

128. Choose the right answer among type which are the following statements are true about Theeran Chinnamalai battles:
கீழ்க்கண்டவற்றுள் தீரன் சின்னமலை போர்கள் பற்றிய சரியான கூற்றுகளை தேர்ந்தெடு

(i) The battle on Cavery Banks in 1801
1801 ஆம் ஆண்டு காவிரிக்கரையில் நடைபெற்ற போர்

(ii) The battle in Odanilai in 1802
1802 ஆம் ஆண்டு ஓடாநிலையில் நடந்த போர்

(iii) The battle in Arachalur in 1806
1806 ஆம் ஆண்டு நடந்த அரச்சலூர் போர்

(A) (i) only
(i) மட்டும் சரி

(B) (i) and (iii) only
(i) மற்றும் (iii) மட்டும் சரி

(C) (i) and (ii) only
(i) மற்றும் (ii) மட்டும் சரி

(D) (ii) and (iii) only
(ii) மற்றும் (iii) மட்டும் சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

129. ____________ organised the Home Rule League at Madurai.
மதுரையில் தன்னாட்சி இயக்கத்தை ஏற்படுத்தியவர் ___________ ஆவார்.

(A) C. Rajaji
சி. இராஜாஜி

(B) Kasturirangan
கஸ்தூரிரங்கன்

(C) George Joseph
ஜார்ஜ் ஜோசப்

(D) V. Kalyana Sundaram
வி. கல்யாண சுந்தரம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

130. Assertion [A] : Home rule league's first conference was held in Cuddalore under the Presidentship of V.P. Madhavan.

கூற்று [A] : தன்னாட்சி இயக்கத்தின் முதல் மாநாடு V.P. மாதவன் தலைமையில் கடலூரில் நடைபெற்றது.

Reason [R] : Annie Besant Started on 8 Sep, 1916 a Home Rule League in Madras.

காரணம் [R] : அன்னிபெசன்ட் அம்மையார் செப். 8, 1916-ல் சென்னையில் தன்னாட்சி இயக்கத்தை ஆரம்பித்தார்.

(A) [A] is true [R] is false

[A] சரி [R] தவறு

(B) [A] and [R] are true and [R] is the correct explanation of [A]

[A] மற்றும் [R] சரி மற்றும் [R], [A]க்கு சரியான விளக்கம்

(C) [A] and [R] are false

[A] மற்றும் [R] தவறு

(D) Both [A] and [R] are true and [R] is not the correct explanation of [A]

[A] மற்றும் [R] இரண்டும் சரி மற்றும் [R], [A]க்கு சரியான விளக்கம் அல்ல

(E) Answer not known
விடை தெரியவில்லை

131. Match the following timeline of early Tamilnadu:
பண்டைய தமிழக கால வரையறையைப் பொருத்துக :

| | List I | | List II |
|---|---|---|---|
| (a) | Megalithic Age<br>பெருங்கற்காலம் | 1. | 300 AD to 500 AD<br>கி.பி. 300 முதல் கி.பி. 500 வரை |
| (b) | Sangam Age<br>சங்க காலம் | 2. | 400 BC to 300 BC<br>கி.மு 400 முதல் கி.மு. 300 வரை |
| (c) | Introduction of Brahmi Scripts<br>பிராமி எழுத்துக்கள் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் | 3. | 300 BC to 300 AD<br>கி.மு. 300 முதல் கி.பி. 300 வரை |
| (d) | Post Sangam Age<br>சங்க மருவிய காலம் | 4. | 1300 BC to 300 BC<br>கி.மு. 1300 முதல்<br>கி.மு. 300 வரை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (1) | (2) | (3) | (4) |
| (B) | (4) | (3) | (2) | (1) |
| (C) | (2) | (1) | (4) | (3) |
| (D) | (1) | (3) | (4) | (2) |

(E) Answer not known
விடை தெரியவில்லை

132. Find out the wrong one:
கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்றைக் கண்டுபிடி.

1. Annie Besant started a weekly called "The Common Weal" in 1914.
அன்னிபெசன்ட் அம்மையார் 1914-இல் "தி காமன் வீல்" என்ற வாரப் பத்திரிக்கையைத் தொடங்கினார்.

2. She published a book "How India wrought for freedom" in 1915
1915-இல் "How India wrought for freedom" என்ற புத்தகத்தை வெளியிட்டார்

3. On September 28, 1915 Besant made a formal declaration for Home Rule movement.
1915 செப்டம்பர் 28 இல் ஹோம்ரூல் இயக்கத்திற்கு அழைப்பு விடுத்தார்.

4. She also started a daily newspaper 'Young India' in 1915.
1915 இல் 'யங் இந்தியா' என்ற தினசரியையும் துவங்கினார்.

(A) [1] and [2] only
[1] மற்றும் [2] சரி

(B) [1], [2] and [3] only
[1], [2] மற்றும் [3] சரி

(C) [1] and [3] only
[1] மற்றும் [3] சரி

(D) [4] only
[4] மட்டும் சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

133. Choose the right matches:
சரியான இணையைக் கண்டறிக.

1. Kundrak Kuravai – A Dance by Mullai Land Women to Thirumal
குன்றக்குரவை முல்லை நில பெண்கள் திருமாலுக்காக ஆடல்

2. Aichiyar Kuravai– A Dance by Kurinchi land women to Murugan
ஆய்ச்சியர் குரவை குறிஞ்சி நில பெண்கள் முருகனுக்காக ஆடல்

3. Marakkal – A Dance by Kotravai to kill Asura
மரக்கால் கொற்றவை அசுரரை கொல்வதற்காக ஆடிய ஆடல்

4. Paavai – A Dance by Thirumagal to conquer Asura
பாவை அசுரரை வெல்ல திருமகள் ஆடிய ஆடல்

(A) [1] and [3] are correct
[1] மற்றும் [3] சரி

(B) [1] and [2] are correct
[1] மற்றும் [2] சரி

(C) [2] and [3] are correct
[2] மற்றும் [3] சரி

(D) [3] and [4] are correct
[3] மற்றும் [4] சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

134. In Tamil Nadu archaeological evidence of Sangam People's tradition have been found in several places. Which one among the following is false?

தமிழ்நாட்டில் சங்ககால மக்களின் வாழ்க்கை முறைக்கான பலவகையான தொல்லியல் சான்றுகள் கிடைத்திருக்கக்கூடிய இடங்களில் எது தவறானது?

1. Vasavasamudram

   வசவசமுத்திரம்

2. Pattanam

   பட்டணம்

3. Kaveri Poompattinam

   காவிரிப்பூம்பட்டிணம்

